வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 16.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற வளாகத்தில், இந்திய தலைவர்களின் சிலைகளை நிறுவ புதிய பகுதியை குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்திப் தன்கர் இன்று திறந்து வைக்கிறார்.
- சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தமது சமூக வலைதளப் பதிவில், பாத ஹஸ்தாசனம் குறித்த காணொளி காட்சிகளை பகிர்ந்துள்ளார்.
- ஜம்மு-காஷ்மீரில் அமர்நாத் யாத்திரைக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுடெல்லியில் இன்று உயர் நிலை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.
- பிரதமர் திரு நரேந்திர மோடி இம்மாதம் 30 ஆம் தேதி ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாகும் மன் கீ பாத் நிகழ்ச்சியில் பங்கேற்று, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்.

<u>தன்கர் (14)</u>

டெல்லியில் உள்ள புதிய நாடாளுமன்ற வளாகத்தில், இந்திய தலைவர்களின் சிலைகளை நிறுவ புதிய பகுதியை குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்திப் தன்கர் இன்று திறந்து வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, மாநிலங்களவை துணை தலைவர் திரு ஹரிவன்ஷ் நாராயணன் சிங், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ ஆகியோர் பங்கேற்கின்றனர். மறைந்த இந்திய தலைவர்கள், சுதந்திர போராட்ட வீரர்களின் சிலைகள், பிரேர்ண ஸ்தால் என்ற பகுதியில் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும்

தலைவர்களின் வரலாறுகள், செய்திகள் மொபைல் போனில் இருந்து க்யூ-ஆர் கோட் ஸ்கேன் செய்து தெரிந்து கொள்ளும் வகையிலான தொழில்நுட்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தலைவர்களின் சிலைகளை சுற்றி தோட்டங்கள், புல்வெளி போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மறைந்த தலைவர்களுக்கு ஒரே இடத்தில் அஞ்சலி செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோடி-ே□ாகா (7)

10 ஆவது சர்வதேச யோகா தினம் வரும் 21 ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தமது சமூக வலைதளப் பதிவில், பாத ஹஸ்தாசனம் குறித்த காணொளி காட்சிகளை பகிர்ந்துள்ளார். இந்த பாத ஹஸ்தாசனம் முதுகெலும்பிற்கு நன்மை அளிப்பதுடன், மாதவிடாயின் போது ஏற்படும் வலியை போக்க உதவுகிறது என்பதால், இந்த ஆசனத்தை பயிற்சி செய்யுமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் கிசான் (17)

பிரதமரின் விவசாயிகளுக்கான கிசான் நிதி உதவி திட்டத்தின் கீழ், 17 ஆவது தவணையாக சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் செவ்வாய் கிழமை வாரணாசியில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்க உள்ளார். உத்திரபிரதேச மாநிலம் வாரணாசி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்ற பிரதமர் வரும் 18 ஆம் தேதி தமது தொகுதிக்கு சென்று பொதுமக்களை சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளார். இந்த நிகழ்ச்சியில் உத்திரபிரதேச மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். வாரணாசியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரதான் மந்திரி

கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ், 20 ஆயிரம் கோடி ரூபாயை விவசாயிகளுக்கு வழங்க உள்ளார். நிகழ்ச்சியில், 30 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் அவர் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்க உள்ளார். பிரதமர் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியை நாடு முழுவதிலும் இருந்து இரண்டரை கோடிக்கும் அதிகமான விவசாயிகள் நேரலை மூலம் கண்டு களிக்க உள்ளனர். இந்நிகழ்ச்சியை மத்திய வேளாண் துறை அமைச்சகமும், உத்திரபிரதேச மாநில அரசும் இணைந்து நடத்த உள்ளது.

__அருங்காட்சி□கம் (11)__

2024 ஆம் ஆண்டு அருங்காட்சியக பட்டியலில் ஸ்மிருதிவனம் உலகளாவிய தேர்வில் இடம் பெற்றிருப்பது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, இன்று அவர் தமது சமூக வலைத்தள பதிவில் விடுத்துள்ள செய்தியில், குஜராத் மாநிலத்தின் கட்ச் பகுதியில் கடந்த 2001 ஆம் ஆண்டு நேரிட்ட நில நடுக்கத்தில் அஞ்சலி செலுத்தும் வகையில், ஸ்மிருதிவனம் என்ற அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இது பின்னடைவில் இருந்து மீண்டு வருதல் மற்றும் தைரியத்தை நினைவூட்டுவதாகவும் அமைந்துள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இந்த அருங்காட்சியகம் 2024 ஆம் ஆண்டுக்கான உலக தேர்வில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

__அஸ்வினி வைஷ்ணவ் (14)__

இந்தியாவின் முதல் படுக்கை வசதிகளுடன் கூடிய வந்தே-பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இன்னும் 2 மாதத்திற்குள் இயக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், படுக்கை வசதிகளுடன் கூடிய வந்தே பாரத் ரயில் பெங்களுருவில் உள்ள ரயில் நிலையத்தில் தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருவதாக

தெரிவித்தார். ரயில் தயாரிக்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும், இன்னும் 2 மாதத்தில் ரயில்கள் இயக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்த புதிய வந்தே பாரத் ரயிலில் நவீன உட்கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட படுக்கை வசதிகள், இருக்கைகள், விளக்குகள் உள்ளிட்ட வசதிகள் உலக தரத்துடன் கட்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த ரயிலில் தீயணைப்பு தடுப்பு வசதியுடன் பல்வேறு வகையான பயணிகள் பாதுகாப்பு வசதிகளும் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<u>அமித் □ ா (12)</u>

ஜம்மு-காஷ்மீரில் அமர்நாத் யாத்திரைக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் புதுடெல்லியில் இன்று உயர் நிலை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஜம்மு-காஷ்மீரின் பாதுகாப்பு அம்சங்கள், சமீபத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதல்கள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுனர் திரு மனோஜ் சின்ஹா, மத்திய உள்துறை செயலாளர் திரு அஜய் பல்லா, உளவுத் துறை இயக்குநர், ராணுவ தலைமை தளபதி திரு மனோஜ் பாண்டே மற்றும் ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி உள்ளிட்ட மூத்த ராணுவ அதிகாரிகள், மத்திய ஆயுதப்படைகளின் ஜெனரல், தலைமை செயலாளர், ஜம்மு-காஷ்மீர் டிஜிபி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*சிவராஜ் சிங் சவுகான்* 1(17)

வளர்ச்சியடைந்த இந்தியா என்னும் குறிக்கோளை அடைய விவசாயம் மிக முக்கியமான அடிப்படை என்றும், விவசாயம் மற்றும் விவசாயிகளின் நலனுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருவதாக வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 18 ஆம் தேதி நடைபெறும் விழாவில், விவசாயிகளுக்கான கவுரவ நிதி உதவித் திட்டத்தை பிரதமர் வழங்க இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் இருந்து இரண்டரை கோடிக்கும் அதிகமான விவசாயிகள் நேரலையில் இணைந்து பங்கேற்பார்கள் என்றும் அவர் கூறினார். 3 கோடி பெண்களை லட்சாதிபதிகளாக உருவாக்க பிரதமர் தீர்மானித்து இருப்பதாகவும், இத்திட்டம் முதற் கட்டமாக குஜராத், தமிழ்நாடு, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், கர்நாடகம், ஆந்திர பிரதேசம், மகராஷ்டிரம், ராஜஸ்தான், ஒடிசா, ஜார்கண்ட், மேகாலயா ஆகிய 12 மாநிலங்களில் தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வரும் 18 ஆம் தேதி உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் பிரதமர் பங்கேற்கும் நிகழ்ச்சியில், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக்

*சிவராஜ் சிங் சவுகான்* 2 (4)

குழுக்களுக்கு வேளாண் தோழிகள் என்னும் சான்றிதழ்களை பிரதமர் வழங்க இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வரும் செவ்வாய் கிழமை நடைபெறும் பிரதமர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் தாம் கடிதம் எழுதி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

***மன் கீ பாத்*** (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி இம்மாதம் 30 ஆம் தேதி ஆகாஷ்வாணியில் நடைபெறும் மன் கீ பாத் நிகழ்ச்சியில் பங்கேற்று, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார். இது பிரதமர் திரு நரேந்திர மோடியின் 111 ஆவது நிகழ்ச்சியாகும். திரு நரேந்திர மோடி பிரதமராக தொடர்ந்து 3 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒலிபரப்பப்படும் முதல் நிகழ்ச்சி இதுவாகும். பிரதமர் பங்கேற்கும் இந்நிகழ்ச்சி தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை 1800-11-7800 என்ற இலவச எண்ணின் மூலம் தெரிவிக்கலாம் என்றும், மேலும், நரேந்திர மோடி ஆப், அல்லது மை கவ் மூலமாகவும் தங்கள் கருத்துக்களையும், யோசனைகளையும் பகிரலாம் என்றும், கருத்துக்கள் இம்மாதம் 28 ஆம் தேதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***அர்ஜுன் ராம் மெக்வால்*** (12)

மக்களுக்கு விரைவான நீதி வழங்க உருவாக்கப்பட்டுள்ள 3 குற்றவியல் சட்டங்கள் அடுத்த மாதம் முதல் அமலுக்கு வர உள்ளதாக மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார். அவர் இன்று கொல்கத்தாவில் நடைபெற்ற குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில் இந்தியாவின் முற்போக்கு பாதை என்ற மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். காலத்திற்கும், நாட்டின் சூழ்நிலைக்கும் ஏற்ப சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆங்கிலேயர் காலத்தின் அடக்குமுறை குற்றவியல் சட்டங்களை திருத்த வேண்டும் என்று நாட்டின் பல்வேறு தரப்பில் இருந்து நீண்ட நாள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை கருத்தில் கொண்டு 3 சட்டங்கள் அடுத்த மாதம் முறை அமலுக்கு வர உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

_பக்ரித் வாழ்த்து_ (11)

தியாகத் திருநாளான பக்ரித் பண்டிகை நாளை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, மக்களுக்கு முக்கிய தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், பக்ரித் பண்டிகை என்பது உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய மக்களால் தியாகத்தின் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது என்றும், தியாகம், இரக்கம், நன்றி உணர்வு போன்ற மனித மான்புகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் இது போன்ற பண்டிகைகள் சமூகங்களுக்கு இடையேயான பிணைப்புகளை வலுப்படுத்தி, நல்லிணக்க உணர்வை வளர்க்க உதவுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த புனிதமான நாளில், அனைவரது குடும்பத்திலும் அமைதி, செழிப்பு மற்றும் மகிழ்ச்சியை கொண்டு வரட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

_லிம்கா_ (11)

இந்திய ரயில்வே சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், 40 லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த சாதனை லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. ரயில்வேத் துறை சார்பில் கடந்த பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி நாடு முழுவதும் 2 ஆயிரத்து 140 இடங்களில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று பல்வேறு ரயில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் இருந்து 40 லட்சத்து, 19 ஆயிரத்து 516 பேர் பங்கேற்றனர். நம் நாட்டில் பொது நிகழ்ச்சி ஒன்றில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்ற, சாதனை இதன் மூலம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இது லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்று அதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.